
ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்



குறள் முழக்கம்

திருவள்ளுவர் ஆண்டு-2057 ஆனி-27 பொ.ஆ.2026- சூலை-11

உலகத் திருக்குறள் இணையக் கல்விக்கழகம் வெளியிடும் இலவச இணையத் திங்களிதழ்



குற்றால அருவி கூட வற்றிப்போய்ப் பார்த்துள்ளேன் ஆனால் என்றுமே வற்றாத தமிழருவி வளமாகப் பொழிந்திடும் நாவலரின் தமிழ்ப்பொழிவைக் கேட்டதே எம் செவிபெற்ற பேறு.

தொல்காப்பியமும் திருக்குறளும் சங்க இலக்கியங்கள் அத்தனையும் ஓடிவரும்;இவர் நாவைத் தேடிவரும்.புலவர் குழந்தையும் பாரதிதாசனும் என்ணிப் பாராத நயமெல்லாம் அவர்கள் பாடல்களில் இவர் காட்டுவார். முழங்கையை மேலும் கீழும் மாற்றி மாற்றி ஆட்டி அசைத்து இவர் நீட்டி முழங்கும் நாடகத்தமிழ் இவருடைய தனி முத்திரை.சிரிப்புத் தோரணம் கட்டி நகைச்சுவையே அடிநாதமாகப் பேசிப் பொருள்குவிக்கும் இன்றைய பேச்சாளர்களோ தம்மை வளர்ப்பார்.என்றும் மேடைத்தமிழின் இலக்கணமாக விளங்கும் நாவலர் தமிழ் ஆர்வத்தை விதைத்தார்.தன்மான எழுச்சியை வளர்த்தார்.

நாவலர் இரா.நெடுஞ்செழியன் அவர்கள் 1920 ஆம் ஆண்டு சூலை 11 ஆம் நாள் நாகை மாவட்டம் நன்னிலம் வட்டம் திருக்கண்ணபுரத்தில் திரு. இராசகோபாலனார் – திருமதி. மீனாட்சிசுந்தரம் அம்மையார் இணையருக்குப் பிறந்தார். முதுகலைப் பட்டம் பெற்றவர். 1972இல் மதுரைப் பல்கலைக்கழகம் இவருக்கு டாக்டர் பட்டம் கொடுத்துப் பாராட்டியது. 1929இல் பட்டுக்கோட்டையில் தந்தை பெரியாரின் பேச்சை முதன்முதலில் கேட்டார். இவர் ஒரு முழுமையான சுயமரியாதைக்காரர்.

1944 இல் குடந்தையில் நடைபெற்ற திராவிடர் மாணவர் மாநாட்டின் இரண்டாம் நாள் மாலை நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கி நடத்தினார். பேரறிஞர் அண்ணாவால் ‘நாவலர்’ என்றும், ‘நடமாடும் பல்கலைக்கழகம்’ என்றும் பாராட்டப்பட்டவர். ‘சுதந்திர நாடு’ ‘மாலைமணி’ என்னும் நாளிதழ்களின் ஆசிரியராகப் பணியாற்றியதோடு ‘மன்றம்’ என்னும் வார இதழைச் சொந்தமாக நடத்தி, கொள்கை பரப்பினார். இந்தித் திணிப்பு மறியல் கிளர்ச்சியில் ஈடுபட்டு சிறைவாசம் அனுபவித்தார்.

1967இல் தி.மு.க. ஆட்சி அண்ணா தலைமையில் அமைந்தபோது பல்வேறு துறைகளின் அமைச்சர் பொறுப்பினை ஏற்றுப் பணியாற்றினார். 1978இல் தமிழ்நாடு அரசின் சார்பாக அமைக்கப்பட்ட பெரியார் நூற்றாண்டு விழாக்குழுவின் தலைவராக மாவட்டந்தோறும் விழாக்களை நடத்துவதில் பெரும்பங்காற்றினார். 1991இல் திருக்குறள் தெளிவுரை நூலை எழுதி வெளியிட்டார்.மதுரை காமராசர் பல்கலைக்கழகம் இவருக்கு ‘தமிழ்ச்செம்மல்’ பட்டமளித்துச் சிறப்பித்தது.

இத்துணைச் சிறப்புகளுக்குரியவரான இச்சுயமரியாதை வீரர் இறுதியாக சென்னை பெரியார் திடலில் நடைபெற்ற 2000 ஆம் ஆண்டு புத்தாண்டு விழாவில் கலந்துகொண்டு எழுச்சியுரையாற்றியது குறிப்பிடத்தக்கது. இத்தகு வரலாற்றுப் பெருமைக்குரியவர் 12.1.2000 அன்று இயற்கையெய்தினார்.

--உண்மை இதழ் மாதமிருமுறை > 2023 > ஜூன் 16-30,2023 > 2025 > ஜூலை 1-15 > நாவலர் இரா.நெடுஞ்செழியன்

“நாவலர் நெடுஞ்செழியன், இப்போது நமக்குப் பொதுச் செயலாளர்!”

_ அண்ணா முழக்கம்

தஞ்சையிலும் மதுரையிலும் நான், பொதுச் செயலாளர் பதவிக்கு வேறு ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தியபோது, புயலே கிளம்பிற்று - எனக்குச் சிறிது சீற்றம் கூடப் பிறந்தது. ஆனால் மெள்ள மெள்ள ஆனால் வெற்றிகரமாகச் சபலத்தைக் கடந்து விட்டோம் கழகம் புதியதோர் கட்டம் வந்து சேர்ந்திருக்கிறது - நாம் வலிவும் பொலிவும் கொண்டதோர் அமைப்புப் பெற்றிருக்கிறோம் என்கிற நம்பிக்கை நமக்கெல்லாம் ஏற்பட்டுவிட்டது பெருமைக்குரிய செய்தி.

தோழர் நெடுஞ்செழியன் இந்தப் பொறுப்பை ஏற்க வேண்டும் என்பது இரண்டாண்டுக் காலமாகவே என் உள்ளத்திலே வளர்ந்த வண்ணம் இருந்த எண்ணம்.

நான் மட்டுமல்ல, நமது கழகத்திலே பெரும்பாலானவர்கள் புதிய பொதுச் செயலாளராகத் தோழர் நெடுஞ்செழியன் வர வேண்டும் என்ற எண்ணத்தைப் பெற்றனர்.

தமிழ் எப்படி எப்படி பேசுவதற்குரியது, இலக்கியம் பேச்சுடன் கலந்து வரும்போது எத்தகைய இன்பமளிக்கும் என்றெல்லாம் நான் பலமுறை எண்ணிப் பார்த்ததுண்டு - மனதிலே உருவெடுத்துக் கொண்டிருந்த ஆசை நடமாடக் கண்டேன், தோழர் நெடுஞ்செழியன், கழக மேடையில் பேசத் தொடங்கியதும்.

நடை இருக்கட்டும், நண்பரின் திறம் இருக்கிறதே, அது கண்டு நான் வியப்புற்றேன்.

என்னிடம் இல்லாத - நான் விரும்பாததால், அல்ல, இயலாததால் - ஒரு அருங்குணம் அவரிடம் உண்டு - கண்டிருப்பீர்கள். ஓயாது உழைப்பது! எப்போதும் எங்கேயும் எதையாவது, எப்படியாவது செய்து கொண்டே இருப்பது.

தோழர் நெடுஞ்செழியனைப் பெரியார், தமது மேற்பார்வையில் வைத்திருந்து பார்த்தார் - அவரால் யார்மீதும் குற்றம் காணமுடியும் ஆனால், தோழர் நெடுஞ்செழியனிடம், அவராலும் ஒரு குறைகூடக் கண்டறிந்து கூற இயலவில்லை.

அத்தகைய பணியாளர் நமக்குக் கிடைத்திருக்கிறார்.

அவருக்குக் கிடைத்திருக்கும் கழகமோ, சாமான்யமான தல்ல!

ஆயிரத்துக்கு மேற்பட்ட கிளைகள்!

இடைவிடாத பொதுமக்கள் தொடர்பு கொண்ட இயக்கம்.

களம் கண்ட காளைகள், தியாகத் தழும்பேற்ற தீரர்கள், கண்ணியத்தைக் காப்பாற்றும் பண்பினர் எண்ணற்றவர்கள்.

இதுகளாவது - கட்சி நடத்துவதாவது - என்ற ஏளனம் ஈட்டி போலக் குத்திற்று. இதோ இரண்டாவது பொதுச் செயலாளர் - இரண்டாவது மாநில மாநாடு!!

இதுகளாவது ஒன்றுகூடி வாழுவதாவது - என்ற சாபம் மிரட்டிற்று.

ஒன்றுகூடி வாழ்வது மட்டுமா - ஒருவரை நம்பி ஒருவர் வாழக் கற்றுக் கொண்டோம் - தனி மனிதர்களைவிட ஒரு அமைப்பே முக்கியம் என்ற தத்துவம். நடைமுறைக்கு வந்து விட்டது. வளர்ச்சி சாதாரணமானதல்ல!!

ஏ! அப்பா! பாரேன், இதுகளுக்குள் மூண்டுவிடப் போகிற வம்பு வல்லடிகளை, போட்டி பொறாமைகளை, பூசல் ஏசல்களை என்று கருவினர் - இதோ ஒரு மனதாகத் தேர்ந்தெடுத்து உடனிருந்து பணியாற்றுகிறோம், புதிய பொதுச் செயலாளருடன்.

தம்பி! நான் இந்த மகிழ்ச்சியிலே திளைத்திருக்கிறேன்.

அணிவகுத்து நின்று, நாம் நம் கடமையைச் செய்ய வேண்டும். சில்லரைத் தகராறுகளைச் சிரித்து விரட்டுங்கள் - பெரிய இலட்சியத்திற்காகப் பாடுபடுகிறோம் என்ற எண்ணம் கொழுந்து விட்டெரியட்டும்.! " 05-08-1955 -திராவிடநாடு

வட்டாடுதலும் சொல்லாடுதலும்

நாவலர் இரா.நெடுஞ்செழியன்

ஆன்றோரும் சான்றோரும் கூடியிருக்கும் பேரவையின்கண் எழுந்து நின்று சொற்பொழிவாற்ற வேண்டும் என்ற வேணவா, பொதுவாக, எல்லோர்க்கும் இருக்கிறது. ஆனால், அந்த அவலை நிறைவேற்றிக்கொள்ளுகிற அளவுக்கு, அறிவோ ஆற்றலோ, துணிவோ ஊக்கமோ அனைவர்க்கும் இருப்பதில்லை. மிகமிகச் சிலர்க்குத்தான் ஊக்கமே ஏற்படுகிறது. அப்படியே ஊக்கம் ஏற்பட்டாலும், அவர்கள் அனைவர்க்குமே துணிவு பிறப்பதில்லை. அப்படியே அவர்களுள்ளும் மிகச்சிலர்க்குத் துணிவு பிறந்தாலும், அவர்கள் எல்லோர்க்கும் ஆற்றல் இருப்பதில்லை. அப்படியே அவர்களுள்ளும் மிகச் சிலர்க்கு ஆற்றல் ஏற்பட்டாலும், அவர்கள் அனைவர்க்குமே போதிய அறிவு இருப்பதில்லை; அவர்களுள்ளும் மிகச்சிலர்க்குத்தான் போதிய அறிவு இருக்கிறது. அப்படியே மிகச்சிலர்க்குத்தான் போதிய அறிவு இருக்கிறது என்றாலும், அவர்கள் எல்லோர்க்குமே நூலறிவு இருப்பதில்லை. அப்படியே அவர்களுள்ளும் மிகமிகச் சிலர்க்குத்தான் நூலறிவு இருக்கிறது என்றாலும், அவர்கள் அனைவர்க்குமே நிரம்பிய நூலறிவு இருப்பதில்லை. அவர்களுள்ளும் மிகமிகச் சிலர்க்குத்தான், எதிர்பார்க்கப்படும் - ஆன்றோரும் சான்றோரும் விரும்பும் நிரம்பிய நூலறிவு இருக்கும். பல்வேறு வகைப்பட்ட நெறியினாலும் நிறைவுற்ற நூல்களை ஐயமறக் கற்ற கற்றோர்கள், ஊக்கத்தோடும் துணிவோடும் அற்றலோடும் அரங்கம் ஏறிச் சொற்பேருக்காற்றத் தொடங்கினால், அவையில் கூடியிருக்கும் அன்றோரும் ,சான்றோரும் பெரிதும் மகிழ்ந்து, கேட்டு, இளைத்து இன்புறுவார்கள். நிறைவுற்ற நூல்கள் பலவற்றையும் கற்காவிட்டாலும், ஏதேனும் ஒரு துறைபற்றிய நூலையாவது ஐயந் திரிபறக் கற்ற கற்றோர்கள் சொற்பொழிவாற்ற முயன்றால், சான்றோர்கள் அத்தகைய சொற்பொழிவை விரும்பிக் கேட்க ஒருப்படுவார்கள். ஆனால், ஒருவன் நிரம்பிய நாலறிவைப் பெறாத கல்லாதவனாய்க் காட்சியளித்து, அவன் எவ்வளவு தான் ஊக்கத்தோடும் துணிவோடும் ஆற்றலோடும் பேசும் திறனைப் பெற்றிருந்தாலும், சான்றோர் அவனுடைய சொற்பொழிவை ஒரு பொருட்டாய் மதிக்கமாட்டார்கள். இதனைப் பொதுவாக உலகியலில் கண்டு வருகிறோம்.

கல்வி அறிவே இல்லாத, கல்லாதவர்கள் சிலர் அவையின்கண் எழுந்து நின்று பேச விரும்புகின்றனர்; அப்படியே பேசவும் செய்கின்றனர். அப்படிப்பட்டவர்களுடைய பேச்சில் எடுப்பும் இருப்பதில்லை, தொடுப்பும் இருப்பதில்லை, முடிப்பும் இருப்பதில்லை; முன்னுக்குப்பின் தொடர்பும் இருப்பதில்லை; ஒரு கருத்தோடு மற்றொரு கருத்து பொருந்தி வருவது மில்லை; ஒரு சொல்லோடு , மற்றொரு சொல் பொருத்தமாகச் சேர்ந்து நிற்பதுமில்லை. முன்னுக்குப் பின் முரண்பாடுகள் மட்டும் எல்லா வகையிலும் நிரம்ப இருப்பதுண்டு; இப்படியாக உளறிக்கொட்டுபவர்கள் இருக்கிறார்கள்.

நூலறிவு இல்லாமல் - அதுவும் நிரம்பிய நூலறிவு. இல்லாமல் - அரங்கம் ஏறிச் சொற்யொழிவாற்ற முயலுபவன் எவனாக இருந்தாலும், . அவன் எவ்வளவு துணிவோடு பேசும் ஆற்றல் பெற்றவனாக இருந்தபோதிலும், வேறு யார் ஒப்புக்கொண்டாலும் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், வள்ளுவர் மட்டும் அவனை ஒரு சொற்பொழிவாளனாக ஒப்புக்கொள்வதே இல்லை. அவன் என்னதான் வாயினின்றும் சொற்களை உதிர்த்தாலும், அந்தச் சொற்களைத் திருவள்ளுவர் ஏற்றுக்கொள்வதே இல்லை. ஏனெனில், அந்தச் சொற்களுக்கு மதிப்பே இல்லை என்கிறார். “ஏன் அந்தச் சொற்களுக்குத் தாங்கள் மதிப்புக் கொடுப்பதில்லை" என்று வள்ளுவரைக் கேட்டால், அதற்கு அவர், சதுரங்கக் கட்டம் வரையாமல் கழற்சிக்காய்களை உருட்டிக் கொண்டிருக்கும் ஒருவனைச் சுட்டிக்காட்டி, “அவனுக்கும் இவனுக்கும் ஒரு வேறுபாடும் இல்லை” என்று கூறுகிறார்.

அரங்கின்றி வட்டாடி யற்றே நிரம்பிய
நூலின்றிக் கோட்டி கொளல். (குறள் - 401)


(சதுரங்கக் கட்டம் வரையாமல், உருண்டைக் காய்களை ஒருவன் உருட்டுவது போன்றதுதான், அறிவு நிரம்புவதற்கு ஏதுவாகிய நூல்களைக் கல்லாது ஒருவன் சான்றோரவையின்கண் ஒன்றனைச் சொல்லுவது. அரங்கு-சூது, சதுரங்கம்; வட்டாடுதல் -

உருண்டை உருட்டுதல்; கோட்டி கொளல் - அவையின்கண் ஒன்று சொல்லுதல்.)

ஆராய்ந்து பார்த்தால், திருவள்ளுவரின் கூற்றுப்படி, கல்வி கற்காதவன் சொல்லும் சொல்லும், சதுரங்கக்கோடு வரையாதவன் உருட்டும் காயும் ஒத்திருத்தலை நன்கு காணலாம். ஒரு வரைமுறையோடு வரையப்படும் சதுரங்கக் கட்டத்தில், ஒரு முறையோடு காய்களை நகர்த்திக்கொண்டு சென்றால்தான், அந்தந்தக் கட்டத்தில் நிற்கும் காய்கள் பெறவேண்டிய மதிப்பைப் பெற்று நிற்கும்; முறையேயோடு வகுக்கப்பட்டுள்ள கட்டங்களில், முறையோடு காய்களை நகர்த்தாமல், பொதுவாக வெற்றிடத்தில் காய்களை உருட்டினால், அவற்றுக்கு ஒரு மதிப்பும் ஏற்படுவதில்லை. அதுபோல, ஒரு வரைமுறையோடு கற்கப்பட்ட கல்வியறிவை அடிப்படையாகக்கொண்டு, அதன் துணையில் சொற்களைச் சொல்லிக்கொண்டே போனால்தான், அந்தச் சொற்கள் பெறவேண்டிய மதிப்பையும் பெறும், உணர்த்த வேண்டிய பொருளையும் உணர்த்தும்.
சதுரங்கம், வரைமுறைப்படுத்தப்பட்ட கட்டங்களைப் படிப்படியாகக் கொண்டது; அதுபோல, கல்வி,வரைமுறைப்படுத்தப்பட்ட நூல்களின் அறிவைப் படிப்படியாகக்கொண்டது.
பகடைகளை முறையோடு உருட்டுவது, காய்களை முறையோடு நகர்த்தக் காரணமாகின்றது; அதுபோல, கருத்துகளை முறையோடு கோப்பது, சொற்களை முறையோடு சொல்லக் காரணமாகின்றது.
சதுரங்கக் கட்டங்களின் வழிமுறையில் மதிப்புள்ள காய்கள் நகருகின்றன; அதுபோல, நூலறிவின் வழிமுறையில் பொருளுள்ள சொற்கள் வெளிப்படுகின்றன.

சதுரங்கக் கட்டங்களின் வழியே செல்லும்போது தான், காய்கள் பெறவேண்டிய மதிப்பைப் பெறுகின்றன; அதுபோல, நூலறிவின் வழியிலே செல்லும்போதுதான் பெறவேண்டிய பொருளைச் சொற்கள் பெறுகின்றன.

சதுரங்கக் கட்டமின்றிப் பொதுவாகக் காய்களை ஒரு தொடர்பும் இல்லாமல் நகர்த்தும்போது காய்களுக்கு மதிப்பே ஏற்படுவதில்லை; அதுபோல, நூலறிவின்றிப் பொதுவாகச் சொற்களை ஒரு தொடர்பும் இல்லாமல் சொல்லும்போது, சொற்களுக்குப் பொருளே ஏற்படுவதில்லை. எனவே தான் வள்ளுவப்பெருந்தகையார், .கல்லாதான் சொல்லும், சதுரங்கக் கட்டத்திலில்லாத காயும் ஒன்றுதான் என்று குறிப்பிட்டுள்ளார்.
சுருங்கக் கூறினால், சதுரங்கக்கோடு இல்லாமல் சதுரங்கம் ஆடுவோம் என்பது எப்படிக் கேலிக்குரிய ஒன்றோ அப்படியே கேலிக்குரிய ஒன்றுதான் நிரம்பிய கல்வியறிவில்லாமல், சான்றோர் அவையில் பேசுவோம் என்பது ஆகும்.
“கட்டளை யன்ன வட்டரங் கு (இ)ழைத்துக் கல்லாச்
சிறாஅர் நெல்லிவட் டாடும்?” (கொல்லன் பொன்னைத் தேய்த்துப் பார்ப்பதற்குப் பயன்படுத்தும் கட்டளைக்கல்லைப் போன்று சதுரங்கள் அமைந்த சதுரங்கக்கோடு இழைத்துக் கல்வி கற்காச் சிறுவர்கள், நெல்லிக்காய்களைக்கொண்டு சதுரங்க ஆட்டம் அடும்) என்னும் “நற்றிணை” அடியிலிருந்து கட்டளை போன்ற சதுரங்களை அரங்காகப் பயன்படுத்துதலும்,நெல்லிக்காய்களை உருண்டைக் காய்களாகப் பயன்படுத்துதலும் தெரியவருகின்றன.[திருக்குறளில் உவமை நயம்-பக்.20-24]







இலக்கிய அருவி

-செந்தமிழ் அரிமா சி.இலக்குவனார்

[நாவலர் பொன்விழா மலரில் எழுதிய கட்டுரை]

மாண்புமிகு கல்வியமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் அரை நூற்றாண்டு [50 ஆண்டுகளைக்] கடந்து .அடுத்த ஆண்டில்- ஐம்பத்தொன்றில்-அடியெடுத்து வைக்க இருக்கின்றார் என்ற செய்தி கரைகாணாக் களிப்புக்கடலில் ஆழ்த்துகின்றது.

பிறந்தார் வளர்ந்தார் என்றில்லாமல்,சிறந்தது பயிற்றல் பிறந்ததன் - பயன் என்று கருதி, பட்டம்பெற்றுப் பதவிக்குச் செல்லாமல், தமிழ்மொழிக்கும் தமிழ் நாட்டுக்கும் தொண்டாற்றத் தம்மை ஆளாக்கிக்கொண்டு அயராது உழைத்து வரும் அரிய செம்மல் ஆவார். நற்றமிழ் நாட்டை நன்முறை ஆளவில்லையேல் “உலகமொடு நிலைஇய பலர் புகழ் சிறப் பின் புலவர் பாடாது வரைக என் நிலவரை” என வஞ்சினம் கூறிய பாண்டி நாட்டுப் பெருமன்னன். நெடுஞ்செழியன் பெயரைத் தமக்குச் சூட்டிக்கொண்டதிலிருந்து - இவர் குறிக்கோளும் செயல் திட்டமும் தெற்றென விளங்கும். அடிமைப்பட்டு மிடிமை புகுந்து அறிவிழந்து அல்லலுறும் தமிழ்மக்களை உய்விக்கப் பகுத்தறிவுப் பாசறை அமைத்த பெரியார் அவர்களின் பெரும்படையின்: ஒப்பற்ற தலைவர் பேரறிஞர் அண்ணாவின் முன்னணியில் முந்துற்ற தம்பியாய் ஆற்றிய தொண்டுகள் அளப்பில, அடைந்த இன்னல்களும் மிகப்பல.

“நாவலர்” எனின் இன்று நமது அன்பர் நெடுஞ்செழியனையே குறிக்கும். கடல்மடை திறந்தாற்போல் இலக்கிய அருவி பெருக்கெடுத்து ஓடிக் கேட்போர் செவிகளில் தேனெனப் பாயும். உரைக்க வேண்டிய பொருள்களை உள்ளத்தமைத்து, மெய்ப்பாடு தோன்றக் குரலை ஏற்றியும் தாழ்த்தியும் கடல் அலைபோல் கருத்தலைகள் தவழ்ந்துவர, பல்வேறு பொருள்கள் பற்றியும் பாங்குடன் உரைத்துக் கேட்டார்ப் பிணித்துக் கேளாரும் வேட்ப மொழிந்து கொள்ளை கொள்வதனால் பல்கலைக் களஞ்சியம் எனவும், நடமாடும் பல்கலை நிலையம் எனவும் நாட்டு மக்கள் புகழாரம் சூட்டுவர்.

தமிழகச் சட்டமன்றப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவராய் இனிய பணியாற்றி இலங்கு புகழ் கொண்ட இவர் பேரறிஞர் அண்ணா அமைச்சரவையிலும் தமிழவேள் கலைஞர் அமைச்சரவையிலும் கல்வித்துறை. அமைச்சராய் மாற்றுக்கட்சியினரும் போற்றும் வண்ணம் அமைதியாக அரும்பணி ஆற்றி வருகின்றார். அன்னைத் தமிழை அரியணையில் அமர்த்தும் பணியில் உலையாது உழைக்க முற்பட்டுவரும் நாவலர் அவர்கள் இன்னும் ஐம்பதாண்டுக்கு மேலும் இனிதே எல்லா நலன்களும் பெற்று வாழ்வாராக.

இவருக்கு இனிய துணையாக அமைந்து வாழ்வுநலம் சிறக்குமாறு அயராது அநம்பணியாற்றும்இவர்வாழ்க்கைத் துணைவி திருமதி விசாலாட்சியம்மையின் இன்புறு இன்னகைப் பெருவெள்ளத்தில் என்றும் நிலைத்து வாழ்வாராக. வாழ்க பொன்விழாக் காணும் நாவலரும் அவர் நல்வாழ்க்கைத் துணைவியும். வாழ்க பல்லாண்டு, வளர் தமிழ்போல்,

“அவரா நீங்கள்?”

நாவலர் இரா.நெடுஞ்செழியன்

சிறுவயதிலிருந்தே தாடியோடு கூடிய தோற்றப் பொலிவு என் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்திருந்தது. கவர்ச்சிதரும் அழகான தாடியோடு கூடிய அறிவியல் அறிஞர்கள், தத்துவ அறிஞர்கள், அரசியல் தலைவர்கள், சமயத் தலைவர்கள் ஆகியவர்களை நேரில் காணும்போதும் சரி, அவர்களின் எழில்மிக்க படங்களை ஏடுகளில் காணும் போதும் சரி, அவர்களை உவகையோடு உற்றுக்காண்பதில் எனக்குத் தனிவிருப்பம் ஏற்பட்டிருந்தது. அந்த விருப்பம் என்னுள்ளத்தில் வேணவாவாக அரும்பி மலரத் தொடங்கிற்று.

நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மூன்றாம் ஆனர்சு வகுப்பில் படித்துக்கொண்டிருந்தபோது, நாமும் தாடி வைத்துக்கொண்டால் என்ன என்ற எண்ணம் காய்த்துக் கனியத் தொடங்கிற்று. துணிந்து தாடி வளர்க்கத் துவங்கினேன். நான்காவது ஆனர்சு வகுப்பின் முதல் பருவம் முடியும் காலம் வரையில் தாடி வைத்திருந்தேன். செப்டம்பர் திங்கள் விடுமுறை நாட்களைக் கழிப்பதற்குச் சொந்த ஊருக்குச் சென்றிருந்தேன். உற்றார் உறவினர் ‘‘தாடி வயதான தோற்றத்தைத் தருகிறது; எனவே அதனை எடுத்துவிடு" என்று வற்புறுத்தினார்கள். நானும் இணங்கி எடுத்துவிட்டேன். பின்னர் நானும் எனது மைத்துனரும் பெரியார் அவர்களைப் பார்க்க ஈரோடு சென்றிருந்தோம். அப்போது தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் படித்துக்கொண்டிருந்தார். விடுமுறைக்காக வந்திருந்தார். அப்பொழுது நானும் அவரை அறியமாட்டேன்; அவரும் என்னை அறியமாட்டார். அவர் யார் என்பதைப் பிறரிடம் வினாவித் தெரிந்து கொண்டேன்.

நாங்கள் சென்ற முதல் நாள், நண்பகல் உணவு முடிந்தவுடன், பெரியார், சம்பத், அவர் தந்தையார், ஆவுடையப்பன், நான் ஆகிய எல்லோரும் உட்கார்ந்து உரையாடிக் கொண்டிருந்தோம். என்னை அடுத்துத் தோழர் சம்பத் அவர்கள் உட்கார்ந்திருந்தார்.

நான், “நீங்கள் பச்சையப்பன் கல்லூரியில் படிக்கிறீர்களா?’’என்று அவரைக் கேட்டேன். “ஆமாம்!” என்றார். “எந்த வகுப்பு?" என்றேன். "முதல் வகுப்பில் படிக்கிறேன்!” என்றார். அவர் திரும்ப என்னைப் பார்த்து, “நீங்கள் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார். “நான் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் படித்துக்கொண்டிருக்கிறேன் !"' என்றேன். “எந்த வகுப்பில் படிக்கிறீர்கள்?” என்றார்; “நான்காம் ஆனர்சு வகுப்பில் படித் துக்கொண்டிருக்கிறேன் !'” என்றேன்.

“அங்கே தாடிவைத்துக்கொண்டு நாராயணசாமி என்று ஒருவர் இருக்கிறாராமே” என்றார்; “ஆமாம்! என்று புன்சிரிப்போடு கூறினேன். “அவரை உங்களுக்கு த் தெரியுமா?” என்றார்; “தெரியும்! என்றேன். “அவரோடு நெருங்கிய பழக்கம் உங்களுக்கு உண்டா? என்றார்; “உண்டு!” என்றேன். “அவர் நமது இயக்கப் பற்றுடையவராமே?” என்றார்; “ஆமாம்!” என்றேன். “அவர் எப்படி?’’ என்றார்; அதற்குமேல் என்னை என்னால் மறைத்து வைத்துக்கொள்ள முடியவில்லை. நான் சிரித்துக் கொண்டு “அவர்தான் நான்!” என தோழர் சம்பத் அவர்கள் உடனே வியப்படைந்து, “அவரா நீங்கள்?!” என்றார். “ஆமாம்!”” என்றேன். “தாடி உண்டு என்று சொன்னார்களே!" என்றார். “தாடி வைத்திருந்தேன் . நான்கு நாட்களுக்கு முன்புதான் எடுத்துவிட்டேன்!” என்றேன். பிறகு நீண்ட நேரம் உரையாடிக் கொண்டிருந்தோம்.

இதுதான் நானும் தோழர் சம்பத் அவர்களும் கூடிப் பேசிய முதல் தடவையாகும். அப்பொழுதெல்லாம் தோழர் சம்பத் அவர்களுக்கு இயக்கப்பற்று உண்டேதவிர, இயக்க நடவடிக்கைகளில் ஆர்வமோ, எழுச்சியோ இருப்பதில்லை, பிறகு பச்சையப்பன் கல்லூரி விடுதியில் இரண்டாம் முறையாக அவரைக் கண்டேன். அப்பொழுது அவர் கல்லூரி ஆசிரியர்களும், மாணவர்களும், மாணவிகளும் கண்டு அஞ்சும்படியான முரட்டு மாணவர்களின் கூட்டத்திற்குத் தலைவராக விளங்கினார். காலஞ் சென்ற பேராசிரியர் வரதராசன் அவர்கள்தான், அவருக்கு உற்ற நண்பர், முரட்டு மாணவர் சம்பத்” துக்கும், “கனிவான அரசியல் தலைவர் சம்பத்துக்கும்' இடையில் எவ்வளவோ மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன. [சிந்தனை மலர்கள் -டாக்டர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., டி.லிட். முதல் பதிப்பு : அக்டோபர், 1982]

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

நாவலர் இரா.நெடுஞ்செழியன்

[இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு-1968-மலரில் வெளியான நீண்ட கட்டுரையின் ஒரு பகுதி]

எடுப்பான தோற்றம் - மிடுக்கான நடை -பரந்த முகம் - விரிந்த நெற்றி - அடர்ந்தெழுந்த மீசை - தூக்கிப் பின்னோக்கி வாரிவிடப்பட்ட கன்னங்கறுத்த தலைமயிர் - அகன்ற கண்கள் - குறுகுறுத்த பார்வை - முகத்திற்குப் பொலிவூட்டும் மூக்கு - மயிரடர்ந்த புருவம் - மூக்கின்மேலே கண்ணாடி - கறுத்தமேனி - மடித்துக் கட்டப்பட்ட வேட்டி - நீண்டு தொங்கும் முழுக்கைச சட்டை - மார்பிலே குறுக்கே போர்த்தப்பட்ட பொடிநிறப் போர்வை - காலிலே தொடுதோல் - கையிலே புகைந்துகொண்டிருக்கும் சுருட்டு!

இந்தத் தோற்றப் பொலிவோடு மனக்கண் முன் தோன்றிப் பூரிப்பும், பெருமையும், பெருமிதமும் அளிப்பவர்தாம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் ஆவார்கள்.

தேசீயக் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார் பரம்பரையிலே தோன்றி, இருபதாம் நூற்றாண்டின் ஈடும் எடுப்பும் அற்ற ஒரு பெரும் புரட்சிக்கவிஞராய்த் திகழ்ந்தவர்தாம் பாரதிதாசன். தமிழால் அவர் புகழ் பெற்றார்; அவரால் தமிழ் பொலிவு பெற்றது. புரட்சிக் கவிஞர் அவர்களது கவிதைகளிலே புரட்சிவாடை வீசும்; கருத்துக் கொண்டல் திகழும்; வீரக்கோடை அடிக்கும்; ஈரத்தென்றல் தவழும்; அழகு மின்னல் பாயும்; கொடுமையை எதிர்க்கும் இடி முழங்கும்; சொல்லருவி வீழும்; பொருளாறு பாயும்; அணிநய மலர்கள் பூக்கும்; கொள்கை மணங்கமழும் ;உண்மை ஒளி வீசும் ; புகழிசை எழும்பும் ; செந்தமிழ்த்தேன் தித்திக்கும்.

“புரட்சிக் கவிஞர்' என்று இன்று நாவார அழைக்கப்படுபவர் முன்பு “பாரதிதாசன்” என்று குறிப்பிடப்பட்டார்; முன்பு பாரதிதாசன் என்று குறிப்பிடப்பட்டவர் அதற்கும் முன்பு கனகசுப்புரத்தினம் என்று விளிக்கப்பட்டார்.

சுப்புரத்தினம் அவர்கள் புதுவையில் பெருவணிகராக விளங்கிய திரு. கனகசபை என்பார்க்கும், திருமதி மகாலட்சுமி அம்மையாருக்கும் 1891-ஆம் ஆண்டு ஏப்பிரல் திங்கள் : 29-ஆம் நாள் திருமகனாகப் பிறந்தார். சுப்புரத்தினம் என்பது பாரதிதாசனார் அவர்களுக்கு, அவருடைய தாய் தந்தையார் வைத்த இயற்பெயராகும். சுப்புரத்தினத்திற்கு இளமையிலேயே நல்ல தமிழார்வமும் இயல்-இசை-கூத்து ஆகியவற்றிலே நல்ல விருப்பமேலீடும் இருந்து வந்தன. அவர், புதுவையில் பிரெஞ்சுமொழிப்பள்ளியில் பயிற்றுவிக்கப்பட்டார் என்றாலும் அவருக்குத் தமிழ்மொழியினிடத்து நீங்காப் பற்றும், தணியா ஆர்வமும் இருந்து வந்ததால் தக்க புலவர்களிடத்திலே முறைப்படி முத்தமிழைப் பயிலுவதிலே மிகவும் நாட்டங் கொண்டார். ஆர்வத்தோ டிம் கல்வி பயின்றார். தமது பதினேழாவது, வயதில்,அதாவது 1908-ஆம் ஆண்டில் புதுவைக் கல்வே கல்லூரியில் நடந்த புலவர் வகுப்புத் தேர்வில், கல்லூரியிலேயே முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார். அப்பொழுது புதுவையை ஆண்டுவந்த பிரெஞ்சு அரசு அவருக்குத் தமிழாசிரியர் வேலை கொடுத்து, காரைக்காலுக்கு அருகிலுள்ள நிரவி என்ற ஊருக்கு அவரை அனுப்பி வைத்து, அங்கே ஆசிரியர் பணி ஆற்றும்படி செய்தது. அப்பொழுது அவருக்குக் கிடைத்துவந்த ஊதியம் முப்பது ரூபாய்கள். நாளடைவில் அவர் கல்வே கல்லூரிக்கே தமிழ்ப் பேராசிரியராக வந்தார்.

புலவர் சுப்புரத்தினம் அவர்கள் பாரதியாரிடத்தில் அளவுகடந்த பற்றும், நட்பும்,மதிப்பும் கொண்டிருந்தார். பாரதியார் அவர்கள் புதுவையைப் புகலிடமாகக்கொண்டு வாழ்ந்து வந்த காலத்தில், அவரோடு பத்து ஆண்டுக்காலம் நெருங்கிப் பழகும் வாய்ப்பு சுப்புரத்தினத்தாருக்கு ஏற்பட்டது. பாரதியாரின் தேசீயப் பாடல்களும், நாட்டு விடுதலைக் கொள்கையும், சமூகச் சீர்திருத் தக் கருத்துக்களும் சுப்புரத்தினத்தாரைப் பெரிதும் கவர்ந்தன. புதுவையில், நண்பர் ஒருவரின் திருமண வீட்டிற்குப் போயிருந்த சுப்பு ரத்தினம் அவர்கள், பகல் விருந்து முடிந்தவுடன், நண்பர்கள் புடைசூழ உட்கார்ந்து பாரதியாரின் நாட்டியல் பாடல் ஒன்றைத் தமக்கே உரிய வீரங் கலந்த எடுப்பான இசையில், உரக்கப்பாடி அங்கே வீற்றிருந்தோர் அனைவரையும்

மகிழ்வித்துக் கொண்டிருந்தார். அந்தத் திருமண வீட்டிற்குப் பாரதியாரும் வந்திருந்தார். அவர்தாம் பாரதியார் என்பதைச் சுப்புரத்தினம் அறியார். அது வரையில் சுப்புரத்தினம் அவர்கள் பாரதியாரின் பாடல்களை அறிவாரேயல்லாமல், அவரை நேரில் கண்டறியார். பாரதியார், சுப்புரத்தினம் பாடுவதைக் கேட்டுத் தாளம் போட்டுச் செவியாரச் சுவைத்து மகிழ்ந்துகொண்டிருந்தார். பாரதியார், சுப்புரத்தினத்தின் பாடுந்திறனையும், கவிதைகளிலே கொண்டுள்ள ஈடுபாட்டினையும் வியந்து பாராட்டினார். அதுமுதல் இருவரும் ஒருவர்க்கொருவர் அறிமுகமாயினர்.

புதுவையில் பாரதியாரோடு மிக நெருங்கிப் பழகியவர்களிலே சுப்புரத்தினம் தலைசிறந்தவராவார். புலவர் சுப்புரத்தினம் பாரதியார் அவர்களைத் தமக்குரிய சிறந்த நண்பராகவும், வழிகாட்டியாகவும், எடுத்துக்காட்டாகவும் கொண்டிருந்தார். சுப்புரத்தினத்திற்குள்ள நல்ல தமிழார்வத்தையும், மொழிப்பற்றையும், இயல் - இசை கூத்துக்களிலே உள்ள ஈடுபாட்டையும், கவிதை புனையும் திறத்தையும், புதுமை வேட்கையையும் பாரதியார் நன்கு அறிந்திருந்தார்.

ஒருபொழுது பாரதியாரோடு உரையாடிக் கொண்டிருந்த நண்பர்கள் சிலர், சுப்புரத்தினத்தின் புலமையைப்பற்றி ஐயப்பாடுகொண்டு ஏதேதோ புகன்றனர். அதைக்கேட்ட பாரதியாருக்கு அடங்காத சினம் பீறிட்டு எழுந்தது. “சுப்புரத்தினம் சிறந்த கவி எழுதக் கூடியவன், தெரியுமா உங்களுக்கு?" என்று அதட்டிக் கேட்டார். அதற்கு எதிர்ப்பான முறையில் அவர்கள்,“பாடச் சொல்லுங்கள் பார்ப்போம்!" என்று கடாவினார்கள். உடனே பாரதியார் சுப்புரத் தினத்தை அழைத்து வரச்சொல்லி :*பாடு ஒரு பாட்டு!" என்றார். உடனே அவர் : *எங்கெங்குக் காணினும் சக்தியடா" என்று தொடங்கும் பாட்டை இரண்டடி -- 16 வரிகளாகப் பாடிக் காட்டினார். அதிலே அழகு, ஆற்றல், இனிமை, பொருள், நயம் எல்லாம் சிறந்து விளங்குவதைக் கண்டு அனைவரும் அவரைப் பாராட்டினர்.

சுப்புரத்தினம் பாரதியார் முன்னிலையில் முதன்முதலில் பாடிய அந்தக் கவிதையைப் பாரதியாரே தம் கையால் எழுதி, அதன் தலைப்பில், '' ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனக-சுப்புரத்தினம் எழுதியது” என்று எழுதிச் 'சுதேசமித்திரன்' செய்தித் தாளுக்கு அனுப்பினார். “சுப்புரத்தினம் ஒரு கவி” என்று பாரதியார் அடிக்கடி எல்லோரிடத்திலும் சொல்லுவதுண்டு. இத்தகைய மதிப்பைப் பாரதியாரிடம் வேறு யாரும் பெற்றதில்லை.
சுப்புரத்தினம் அவர்கள் சுப்பிரமணிய பாரதியாரிடம் கொண்டிருந்த அளவுகடந்த பற்றின் காரணமாகவும், மதிப்பின் காரணமாகவும் தம் பெயரைப் பாரதிக்குத் தாசன் என்று பொருள்படும்படி “பாரதிதாசன்'' என்று மாற்றி அமைத்துக் கொண்டார். இறுதிவரையில் அவர் “பாரதிதாசன்' என்றே கையெழுத்துப் போட்டு வந்தார்.

தமிழையும் பாரதியாரையும்போற்றிப் பாராட்டிப் பெருமைப்படுவதிலே பாரதிதாசன் தனி இன்பங் கண்டார். பாரதிதாசன் பாரதியாரைப் பற்றிக் குறிப்பிடும்போதெல்லாம் அவர்பால் தாம் கொண்டிருந்த பேரன்பும் பெருமதிப்பும் வெளிப்பட நன்றியுணர்வோடு புகல்வார். பாரதியாரைப்பற்றிக் குறிப்பிட வந்த பாரதிதாசன்,

“தமிழகம், தமிழுக்குத் தகும் உயர் வளிக்கும்
தலைவனை எண்ணித் தவங்கிடக் கையில்
இலகு பாரதிப் புலவன் தோன்றினான். '

என்று தமிழையும், பாரதியையும் நன்கு இணைத்து அழகுற மொழிகிறார்.
பாரதியாரைப்பற்றிப் பாரதிதாசன் புகழ்ந்து பாடியிருப்பதைப்போல், வேறு யாரேனும் அவ்வளவு அருமையாகப் பாட முடியுமா என்று கண்டறிவது அரிதேயாகும். பாரதிதாசனாரின் உள்ளத்தில் பாரதியார் எப்படிப்பட்ட இடத்தைப் பெற்றிருந்தார் என்பதை,


““பைந்தமிழ்த் தேர்ப் பாகன்; அவனொரு





செந்தமிழ்த் தேனீ; சிந்துக்குத் தந்தை!


குவிக்கும் கவிதைக் குயில்! இந்நாட்டினைக்
கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு!
நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா!
காடு கமழும் கற்பூரச் சொற்கோ!
கற்பனை ஊற்றாம் கதையின் புதையல்!
திறம்பாட வந்த மறவன்; புதிய
அறம்பாட வந்த அறிஞன்; நாட்டிற்
படரும் சாதிப் படைக்கு மருந்து!
மண்டும் மதங்கள் அண்டா நெருப்பவன்!
அயலார் எதிர்ப்புக் கணையா விளக்கவன்”


என்ற சொல்லோவியத்தால் தெள்ளிதின் அறியலாம். பாரதியாருக்கும் பாரதிதாசனார்க்கும் பலவகைகளிலே ஒற்றுமை பழக்க வழக்கங்களும் இருவரிடத்திலும் பெரும்பாலும் ஒரே தன்மையனவாகவே காணப்படும்.பாரதியாருக்கு எப்படித் தமிழினிடத்திலே தணியாத காதல் உண்டோ, அப்படியே பாரதிதாசனாருக்கும் உண்டு. பாரதியார் எவ்வாறு மறவனைப்போல் தோற்றமளிப்பாரோ, அவ்வாறே பாரதிதாசனாரும் தோற்றம் அளிப்பார்பாரதியார் எப்படிக் குனியாமல், கூனாமல் வணங்காமுடிபோல் தலைநிமிர்ந்து நடப்பாரோ, அப்படியே பாரதிதாசனாரும் தலைநிமிர்ந்தே நடப்பார். பாரதியார் எவ்வாறு யாருக்கும் அஞ்சாமல், எதற்கும் அஞ்சாமல் வாழ்ந்தாரோ அவ்வாறே பாரதிதாசனாரும் அஞ்சாமல் வாழ்ந்தார்.
பாரதியார் எப்படிக் தம்மோடு மாறுபட்டு எதிர்ப்பவரைக் கடுமொழியில் வெஞ்சினங்கொண்டு எதிர்ப்பாரோ, அப்படியே பாரதிதாசனாரும் வெஞ்சினங்கொண்டு எதிர்ப்பார். பாரதியார் எவ்வாறு இயல், இசை, கூத்து என்னும் முத் துறையிலும் ஈடுபாடு கொண்டிருந்தாரோ, அவ்வாறே பாரதிதாசனாரும் ஈடுபாடு கொண்டிருந்தார். பாரதியார் எப்படி விடுதலை வேட்கையும்,புதுமை வேட்கையும், சீர்திருத்த நோக்கமும் கொண்டிருந்தாரோ, அப்படியே பாரதிதாசனாரும் அவற்றிலே பேரார்வங் கொண்டிருந்தார். பாரதியார் எவ்வாறு கிடைத்ததையெல்லாம் செலவழித்துவிட்டு வறுமையிலேயே வாழ்வை முடித்தாரோ, அவ்வாறே பாரதிதாசனாரும் வறுமையிலேயே வாழ்வை முடித்தார். இந்த நூற்றாண்டுத் தமிழகத்தில் மக்களின் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்த கவிஞர்கள் பாரதியாரையும், பாரதிதாசனாரையும் தவிர வேறு யாரும் இல்லை என்று துணிந்து கூறலாம்.






வாழ்வில் நான்
கண்டதும் கேட்டதும்


திருக்குறள்
தெளிவுரை
டாக்டர் நாவலர்
இரா. நெடுஞ்செழியன் எம். ஏ., டி. லிட்.


அண்ணாவோடு வாழ்ந்த
அந்த சிறைவாசம்
டாக்டர் நாவலர்
நெடுஞ்செழியன், எம்.ஏ.டி.லிட்.


மொழிப்போராட்டம்
இரா. நெடுஞ்செழியன்
மாதா
அம்மா
திராவிடப்பண்ணை